முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1666

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.04.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார ஞான சூட்சுமமே
   ஓங்காரக்குடில் படைத்த அரங்கனே
   ஓங்காரன் என் அவதார ஞானியே
   ஓங்காரன் யானும் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை குரோதி தகர் திங்களில்
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 08 ம் நாள், 21.04.2024, ஞாயிற்றுக்கிழமை)
   அரங்கனுக்கு பலம் கூட எடுத்துரைப்பேன்
   வாசி வென்ற ஞானியர்கள் கூட்டமெல்லாம்
   வணங்கி அரங்கன் குடிலில் தஞ்சமாய் இருக்க
3. இருக்கவே உலகோர் அரங்கன் குடில் நோக்கி
   இனிதே அபயமென வணங்கி வந்தால்
   கருத்தாக வருபவர்கள் எல்லோருக்கும்
   கர்மவினை நீக்கமாவதோடு
4. ஆவதுடன் அவரவர்க்கும்
   ஆத்ம ஞான பலம் அளவிலா பெருகி இனிதே
   மாற்றங்கள் அரங்கன் தயவாலும்
   மாதவசி அரங்கன் அருளமுதாலும்
5. அமுதாலும் இனிதே உலகோர் கண்டு
   அகிலத்தில் ஞானவான்களாகத் தேறி
   நேமமுடன் பேருலகம் மாற்ற வல்ல
   நிலமதனில் ஞானபலத்தோடு ஞானிகள் ஆசி சக்தியும் கூடி
6. கூடி இனிதே உலகோர் குரு அரங்கன் வழிகாட்டலின் பேரில்
   குவலயத்தையே மாற்றி அற்புதம் படைப்பர்
   ஆகவே உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி வந்தால்
   அகிலத்துக்கு மாற்றம் சடுதி காணும்

7. வகைபட அரங்கன் தொண்டர்களாகி
வலம்வந்தால் போதும் உலகமெங்கும்
அற்புதம் சடுதி காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–